**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 24.05.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச சிறுதானிய கருத்தரங்கு மற்றும் எதிர்காலம் சார்ந்த சிறுதானிய உணவுப் பொருட்கள் கண்காட்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியத்துறை துவங்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. இத்துறையில் சிறுதானிய ஆராய்ச்சிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சர்வதேச சிறுதானிய ஆண்டு மற்றும் சிறுதானியத் துறையின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "சர்வதேச சிறுதானிய கருத்தரங்கு மற்றும் எதிர்காலம் சார்ந்த சிறுதானிய உணவுப் பொருட்கள் கண்காட்சி" **மே மாதம் 24** ஆம் தேதி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் துவங்கியது.

மாண்புமிகு தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணை வேந்தர், திரு.எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்கள் "சர்வதேச சிறுதானிய கருத்தரங்கு மற்றும் எதிர்காலம் சார்ந்த சிறுதானிய உணவுப் பொருட்கள் கண்காட்சி" யினை துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர் வெ.கீதாலட்சுமி, அவர்கள் சிறுதானியத்தில் உள்ள சத்துக்களின் முக்கியத்துவம் மற்றும் இந்த பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டின் சிறுதானியத்தில் சாதனைகள் குறித்து விளக்கினார்.

மாண்புமிகு தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணை வேந்தர், திரு.எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்கள் நமது உணவில் சிறுதானியத்தின் முக்கியத்துவம் குறித்தும் தமிழ்நாடு அரசின் சிறுதானிய உற்பத்தியினை ஊக்குவிக்கும் செயல் திட்டங்களையும் விளக்கினார். பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தின் இயக்குனர் முனைவர் இரா.ரவிகேசவன், அவர்கள் வரவேற்புரை வழங்கினார். புத்தக வெளியீட்டு நிகழ்வும் மற்றும் ஓய்வு பெற்ற சிறுதானிய விஞ்ஞானிகளை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

நபார்டு, சென்னையின் முதன்மை மேலாளர், திரு.டீ.வெங்கடகிருஷ்ணன் அவர்கள் சிறுதானிய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த தங்களின் செயல் திட்டங்களை விளக்கினார். நபார்டு, சென்னையின் பொது மேலாளர் திரு.சங்கர நாராயணன் அவர்கள், நபார்டின் செயல் திட்டங்களை எடுத்துரைத்தார். சர்வதேச மக்காச்சோள திட்டம், நைரோபி, கென்யாவின் இயக்குநர், முனைவர்.பி.எம். பிரசன்னா அவர்கள் எதிர்மறை சூழ்நிலைகளை தாங்கி வளரும் சிறுதானியத்தின் பண்புகளை விளக்கினார். இந்த கருத்தரங்கின் மூலம் சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் நுகர்வோர்களுக்கிடையே சிறுதானியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

இந்த கருத்தரங்கில் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விஞ்ஞானிகள், இளம் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், விவசாயிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்றனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக சிறுதானியத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்.சு.சிவகுமார் அவர்கள் நன்றியுரை நல்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**